**அப்போஸ்தலனாகிய சீமோன்**

**வாசிக்க**: 2**கொரிந்தியர்** 4:1-18

சீமோன் கானா ஊரை சார்ந்தவர். சீமோன் என்றால் மணல் என்று அர்த்தமாகும். இவருக்கு ரோமர்கள் மேல் வெறுப்பு அதிகமாக இருந்ததால் செலோத்தே என்னும் தீவிரமான தேசியவாத குழுவில் போய் சேர்ந்துகொண்டார்.

யூதர்கள் ரோமர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள். அவர்கள் யூதர்களை கொடுமைப்படுத்தி கட்டாயமாக வரி வாங்கிக்கொண்டிருந்தார்கள். ரோமர்களிடமிருந்து யூதர்களை காப்பாற்றுவதற்காகவும், விடுதலை வாங்கிக் கொடுப்பதற்காகவும் ரோம அரசாங்கத்தை எதிர்ப்பதற்காகவும் தோற்றுவிக்கப்பட்ட குழுதான் இந்த செலோத்தே குழுவினர். ரோம ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று போராடிய யூதா எனப்பட்ட ஒரு தேசியத் தலைவனைப் பின்பற்றிய கூட்டத்தினர்தான் செலோத்தேர் (கானனியர்) என்று அழைக்கப்பட்டனர். செலோத்தே என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம் எரிச்சல் உள்ளவர்கள் அல்லது வைராக்கியம் உள்ளவர்கள் என்று அர்த்தமாகும்.

இவர்கள் ஆயுதங்கள் மூலம்தான் யூதர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்க முடியும் என்று நம்பி செயல்பட்டார்கள். மறைந்திருந்து தாக்கும் முறையில் இவர்கள் செயல்பட்டார்கள். (கொரில்லா தாக்குதல்) இந்த செலோத்தே குழுவில் தான் இந்த யாக்கோபு இணைந்து செயல்பட்டார். தீவிரவாதியாகவும், கொடியவனாகவும், உணர்ச்சிவசப்படுபவனாகவும் சீமோன் இருந்தான். ஆனால் இப்படிப்பட்ட யாக்கோபைத்தான் தமது ஊழியத்துக்காக இயேசு கிறிஸ்து தெரிந்துக்கொண்டார். பணிவும் சாந்தமும் உள்ள நபராக மாறினார். மக்களுக்கு ஆயுதங்கள் மூலமாக அல்ல அன்பின் மூலமாக விடுதலைக் கொடுக்க தேவன் தெரிந்துக்கொண்டார்.

சீமோன் எகிப்து, சைரீன், லிபியா, டுனிசியா, அல்ஜீரியா, மசிடேனியா, ஸ்பெயின், பிரிட்டன் போன்ற நாடுகளில் ஊழியம் செய்து சபைகளை ஆரம்பித்து தேவனுடைய இராஜ்யத்தை விரிவடைய செய்தார். அதன் பின் ததேயுடன் இணைந்து பாரசீகத்தில் ஊழியம் செய்தார். அங்கு அவர் ஊழியம் செய்து கொண்டு இருக்கும்போது, அங்கு இருந்த பூசாரிகள் இவரை பிடித்து உயிருடன் இருக்கும்போதே இரம்பத்தால் அறுத்து சாகடித்தார்கள். கி.பி 72 ஆம் ஆண்டு சீமோன் இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார்.

**கேள்விகள்**:

1. சீமோன் என்றால் என்ன?

2. செலோத்தே என்றால் என்ன?

3. சீமோன் இயேசு கிறிஸ்துவுக்காக எப்படி இரத்த சாட்சியாக மரித்தார்?